சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்
SC.123/2014

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திரு.ப.ரவிச்சந்திரன், Central Nazir, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்.தனசேகரன் (PW1) | நாள் 19.11.2019 |
| த/பெ. | தொழில் |
| வயது. | வட்டம் |
| கிராமம். | Pan Card No. |
| Adhar Card No. | |
| Bank Acc.No. | |

**அ.சா.1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உதவி ஆய்வளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது செங்கல்பட்டில் குடியிருந்து வருகிறேன். 22.06.2007ம் தேதி மதுராந்தகம் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். காவல் ஆய்வாளர் திரு.மோகனவேல் ஆய்வாளர் அவர்கள் மதுவிலக்கு வழக்கு சம்பந்தமாக வாகன தனிக்கை செய்ய வேண்டி அழைத்ததின் பேரில் நானும், உதவி ஆய்வாளர் ரவிக்குமார், தலைமை காவலர் சுப்பிரமணி, தலைமை காவலர் 1475 சிவஞானம் ஆகியோர்கள் ஆய்வாளருக்கு உதவியாக சித்தாமூர் காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட நீர்பெயர் கிராமம், சூணாம்பேட்டிலிருந்து சித்தாமூர் செல்லும் சாலையில் வாகன தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது சூணாம்பேட்டிலிருந்து ஸ்கார்பியோ கார் வேகமாக வந்ததை ஆய்வாளர் அவர்கள் தடுத்து நிறுத்தி, ஸ்கார்பியோவில் முன்னாடி உட்கார்ந்திருந்த நபரை பெயர், விலாசம் விசாரிக்க தன் பெயர் முருகன் என்றும், த/பெ.சின்னதம்பி, தானாங்குப்பம், ஒலக்கூர் என்றும் சொன்னார், காரின் ஓட்டுநரை விசாரிக்க அவர் பெயர் ஆறுமுகம், த/பெ.வரதராஜ், வெண்ணிலா நகர், மாரியம்மன் கோயில் பின்புறம், பாண்டிச்சேரி என்று சொன்னார்கள். மேற்படி அவர்கள் ஓட்டி

வந்த ஸ்கார்பியோ காரின் பின் பக்கம் சோதனை செய்ய அதில் 35 லிட்டர் கொள்ளளவு கொண்ட 20 வெள்ளை கேன்கள் இருந்தது. அதில் நீர் கலந்த எரிசாராயம் இருந்தது. ஆய்வாளர் அவர்கள் 15.15 மணிக்கு கைது செய்தும், முருகன் என்பவரிடம் 15.15லிருந்து 16.15 வரை ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் முருகன் என்பவர் காட்டுதேவாதூரை சேர்ந்த சத்தியா என்பவர் தனக்கு 35 லிட்டர் கொள்ளவு கொண்ட எரிசாராயம் 20 கேன்கள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில் கொண்டுவந்ததாக சொன்னார். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அதில் நானும், ரவிக்குமார் உதவி ஆய்வாளார் அவர்களும் கையெழுத்து செய்தோம். மேற்படி ரசாயண பரிசோதனை வேண்டி 35 லிட்டர் கொள்ளவு கொண்ட 20 கேன்களில் சுமார் 100 மி.லி வீதம் எடுத்து ஒரு பக்கட்டில் ஊற்றி அதை கலந்து 500 மி.லி கொண்ட 4 பாட்டில்களில் ஊற்றி சீல் வைத்து லேபிள் ஒட்டப்பட்டது. மேற்படி எதிரியின் சொத்து வாகனம் எண்.டிஎண்.21.கே.6244 மகஜரில் கைப்பற்றினோம். பொதுமக்கள் யாரும் இல்லாததால் நானும், உதவி ஆய்வாளர் ரவிக்குமாரும் கைபற்றதல் மகஜரில் கையெழுத்து செய்தோம். பிறகு அழித்தல் மகஜர் தயார் செய்து சம்பவ இடத்தில் கொட்டி அழித்தோம், அதில் நானும், உதவி ஆய்வாளர் ரவிக்குமாரும் கையெழுத்து செய்தோம். எதிரி சொத்துக்களுடன் 18.30 மணிக்கு மதுராந்தகம் காவல்நிலையத்திற்கு வந்து எதிரி மீது குற்ற எண்.707/2007 பிரிவு 41(ஏ) உடனினைந்த 6 மதுவிலக்கு சட்டம் பிரிவில் பதிவு செய்தோம். எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1.** கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-2**. அழித்தல் மகஜர் **அ.சா.ஆ-3**. என்னை ஆய்வாளர் விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் கேன்கள் மற்றும் பாட்டில்கள் நாங்கள் கைப்பற்றிய பாட்டில்களா என்பது எனக்கு ஞாபகத்தில் இல்லை.

**<u>1 மற்றும் 2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக காவல் துறையினர் அன்றாட பணிகளை குறித்து வைக்க எங்களுக்கு பாக்கெட் டைரி உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போன்று வழக்கு சம்பவம் நடந்திருந்தால் அந்த விவரங்கள் என்னுடைய பாக்கெட் டைரியில் இடம் பெற்றிருக்கும் என்றால் சரிதான். என்னுடைய பாக்கெட் டைரியை ஆய்வாரிடம் கொடுக்கவில்லை. என்னுடைய பாக்கெட்

டைரியை பார்தால் தான் நான் சொல்வது போன்று சம்பவம் நடந்ததா நான் அன்றைய தேதியில் பணியலிருந்தேனா என்று தெரியவரும் என்றால் நான் பணியில் தான் இருந்தேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடமான சூணாம்பேட்டிலிருந்து சித்தாமூருக்கு செல்லும் சாலையில் நீர்பெயர் கிராமம் இல்லை என்றும் நான் மேற்படி முதல் விசாரணையில் சொல்லியுள்ள நீர்பெயர் கிராமத்திற்கு போந்தூர் கூட்டு சாலையிலிருந்து 4 கி.மீட்டருக்கு உள்ளே சென்றால் தான் வரும் என்றால் நான் சொல்கின்ற இடம் நீர்பெயர் கிராம பேருந்து நிறுத்தம் ஆகும். என்னை ஆய்வாளர் விசாரித்த போது நீர்பெயர் கிராமம் என்று தான் சொல்லியுள்ளேன் என்றும் நீர்பெயர் கிராம அருகே என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் அரசு வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் எடுப்பதற்கு பயன்படுத்தப்ட்ட பாட்டில்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதா அல்லது தனிநபர்களிடமிருந்து வாங்கப்பட்டதா என்றால் தனிநபரிடமிருந்து வாங்கப்பட்டது. மாதிரி எடுப்பதற்கு முன்பு அந்த பாட்டில்களில் என்ன வகையான திரவம் பயன்படுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து இவ்வழக்கு சான்று பொருட்கள் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் காவல் ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாதிரி திரவத்தை காவல் ஆய்வாளர் மோகனவேல் தான் எடுத்தார், வேறொரு ஆய்வாளர் முன்னிலைக்கு மாதிரிக்கு எடுக்கப்பட்டு சான்றொப்பம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

1 மற்றும் 2வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 3வது எதிரியால் தத்தெடுக்கப்பட்டது.

(மறு விசாரணை இல்லை)